FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120362

5/AC/2025

1. District : சேலம் மாவட்டம் PS: அஸ்தம்பட்டி காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: முத.அ. எண் Date: 16.05.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 15.05.2025 நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : 18.30 மணிக்கு முன்பாக நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.05.2025 Time : நேரம் 08.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.05.2025 Time : நேரம் 09.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: இரகசிய தகவலின் பேரில் குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1.5 கி.மீ தென்மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி பாரதம் எலக்ட்ரிகல்ஸ் & ஏஜென்சீஸ், கதவு எண் 229 ஸ்டேடியம் ரோடு, சேலம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. நரேந்திரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : S. நாகராஜன் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி வீடு எண் 6, பாரதி தெரு, கன்னங்குறிச்சி, சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / நபர்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைபெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. V. பிரகாஷ், செயல் அலுவலர், நிறைநிலை பேரூராட்சி, செந்தாரப்பட்டி, சேலம் மாவட்டம்.
2) திரு. K. ஆறுமுகம், அலுவலக உதவியாளர், நிறைநிலை பேரூராட்சி, செந்தாரப்பட்டி, சேலம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

ஆபரம் தணிகாணல் இணைக்கப்படுகிறது.

/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendran 16.05.2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.05.2025 at 9.45 Hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Narendran
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
V+ AC, Salem

சேலம் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் வரிசை எண் 12 ன் விபரம்.

15.05.2025 ந் தேதி சேலம் மாவட்டம் செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.V. பிரகந்தநாயகி அவர்கள் தனது அலுவலக உதவியாளர், திரு.K.ஆறுமுகம் மூலம் செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முடிக்கப்பட்ட அரசு ஒப்பந்த பணிகளுக்கான பட்டியல்களுக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்ட வகையில் காசோலை வழங்குவதற்காக அந்த பணிகளை முடித்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து சட்டத்திற்கு புறம்பான கமிஷன் தொகை வசூலிப்பதாகவும், மேலும் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்ட பணிகள், பராமரிப்பு பணிகள் போன்ற பணிகளுக்கான டெண்டரில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்தும் சேலம் மாவட்டம் உள்ளாட்சி தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வைத்து கமிஷன் என்ற வகையில் கையூட்டு கேட்டுபெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திருமதி.V.தமிழ்செல்வி, தேர்தல் துணை வட்டாச்சியர், சேலம் மேற்கு வட்டம், சேலம் மாவட்டம் மற்றும் திரு. M. ராமலிங்கம், கிராம நிர்வாக அலுவலர், மெய்யனூர் குரூப் கிராமம், சேலம் மேற்கு வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் முன்பாக 15.05.2025 ந் தேதியன்று பகல் 15.30 மணிக்கு சேலம் மாவட்டம் உள்ளாட்சி தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தின் முன்பு கண்காணித்து கொண்டிருந்தபோது, 15.05.2025 ஆம் தேதி மாலை சுமார் 16.15 மணிக்கு திரு.ஆறுமுகம், அலுவலக உதவியாளர், செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, சேலம் அவர்கள் சேலம் மாநகராட்சி வளாகத்திற்குள் உள்ள உதவி இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை அலுவலகம், சேலம் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தவர் அவர் வைத்திருந்த கருப்புநிற பேக்கை திறந்து ரூபாய் நோட்டுக்கட்டுகளை வெளியே எடுத்துவிட்டு சரிபார்த்து மீண்டும் உள்ளே வைத்துவிட்டு அதனை எடுத்துக்கொண்டும், அதனுடன் ஒரு மஞ்சள் நிற கட்டை கைப்பிடி பை ஒன்றும் எடுத்துக்கொண்டு அந்த அலுவலகத்தின் முன்பாக கீழே நிறுத்திவைக்கப்பட்டிருந்த TN 30 M 7912 என்ற Hero Honda Splendour இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு முள்ளுவாடிகேட்டிற்கு போகும் ரோட்டின் வழியாக

சென்றவரை காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையிலான தீவிர் சோதனை குழுவினருடன் திரு.ஆறுமுகம் அவர்களை பின்தொடர்ந்து கண்காணித்தபோது அவர் சேலம் ஸ்டேடியம் ரோடு கதவு எண்.229 என்ற முகவரியில் இயங்கிவரும் ஸ்ரீராம் எலக்ட்ரிக்கல்ஸ் & ஏஜென்சிஸ் என்ற கடையின் அருகில் சுமார் 16.30 மணிக்கு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அவர் எடுத்துவந்த கருப்புநிறப்பை மற்றும் கட்டைப்பையுடன் கடைக்குள் சென்றவர், சுமார் 17.20 மணிக்கு அவர் மட்டும் அவரது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் சேலம், உள்ளாட்சி தணிக்கை, உதவி இயக்குநர் அலுவலகத்திற்குள் சென்றவரை கண்காணித்து வந்தநிலையில் சுமார் 18.15 மணிக்கு தணிக்கை அலுவலகத்தினைவிட்டு வெளியேவந்த மேற்படி அலுவலக உதவியாளர் திரு.ஆறுமுகம் அவர்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் அழைத்து விசாரித்தபோது அவர், தன்னை பற்றிய விபரங்களை தெரிவித்து, தான் இன்று 15.05.2025 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் சேலம், உள்ளாட்சி தணிக்கை அலுவலகம், உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு செந்தாரப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சியின் 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளின் நிலுவை தணிக்கை நீக்கம் செய்வது தொடர்பாக விளக்கம் தெரிவிக்க தணிக்கை அலுவலகம் வரச்சொன்னதன்பேரில் தான் இன்று தணிக்கை அலுவலகம் வந்ததாகவும். மேலும், சேலம் மாவட்டம் செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.V. பிரகந்தநாயகி அவர்கள் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே முடிக்கப்பட்ட அரசு ஒப்பந்த பணிகளுக்கான பட்டியல்களுக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்ட வகையில் காசோலை வழங்குவதற்காக ஒப்பந்ததாரர்களிடம் இருந்து கமிஷன் தொகை வரவேண்டியுள்ளதாகவும், அந்த கமிஷன் தொகையை சேலத்தில் உள்ள ஒப்பந்ததாரர் சிலரிடம் கேட்டிருப்பதாகவும், இன்று அவர்கள் உள்ளாட்சி தணிக்கை அலுவலகம் அருகில் தான் வரச்சொல்லியுள்ளதாகவும், அவர்கள் அங்கு வந்தவுடன் தங்களுக்கு தகவல் தெரிவிப்பார்கள் என்றும் பின்னர் அவர்களை சந்தித்து அவர்களிடம் இருந்து கமிஷன் தொகையை பெற்றுவந்து தன்னிடம் கொடுக்கும்படியும் தெரிவித்திருந்தார் என்றும், அதன்பேரில் 15.05.2025 ந் தேதி பகல் சுமார் 13.00 மணிக்கு எனக்கு அடையாளம் தெரிந்த ஆனால் பெயர் தெரியாத ஒப்பந்ததாரர் ஒருவரை அடையாளம் கண்டு கமிஷன் தொகை குறித்து

கேட்டபோது அந்த நபர் ரூ.3,56,000/- ம் இருப்பதாக கூறி தன்னிடம் பணம் கட்டுகள் கொடுத்தார் என்றும், அந்த பணத்தை ஒரு பேப்பரில் சுற்றி தனக்கு தெரிந்த சேலம் ஸ்டேடியம் ரோடு கதவு எண்.229 என்ற முகவரியில் இயங்கிவரும் ஸ்ரீராம் எலக்ட்ரிக்கல்ஸ் & ஏஜென்சிஸ் என்ற கடைக்கு சென்று போன் சார்ஜர் போட்டுவிட்டு எனது கருப்பு நிற பேக்கில் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் அதனை அடையாளம் காட்டி எடுத்து கொடுப்பதாகவும் தெரிவித்ததன்பேரில், அவரது இருசக்கர வாகனத்துடன் அழைத்துச்சென்று சேலம் மாநகரம், ஸ்டேடியம் ரோடு கதவு எண்.229 என்ற முகவரியில் இயங்கிவரும் ஸ்ரீராம் எலக்ட்ரிக்கல்ஸ் & ஏஜென்சிஸ் என்ற கடையினை அவர் அடையாளம் காட்ட சாட்சிகள் முன்னிலையில் 18.30 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கடையின் மத்திய பகுதியில் வைக்கப்பட்டிருந்த இரும்பு ரேக்கிற்கு பின்புறம் அழைத்து சென்று அந்த இடத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த அட்டைப்பெட்டிகளுக்கு மேல் வைக்கப்பட்டிருந்த அவரது கருப்பு நிற பேக் ஒன்றும், மஞ்சள் நிற கட்டை கைப்பை ஒன்றினையும் எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் சோதனை செய்தபோது, அந்த கருப்பு நிற பேக்கில் செந்தாரப்பட்டி பேரூராட்சி அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் காணப்பட்டன. மேலும் அந்த கருப்பு நிற பையில் பேப்பர் போட்டு சுற்றிவைக்கப்பட்டிருந்த பண்டில் ஒன்று காணப்பட்டது. அதனை சாட்சிகள் முன்னிலையில் திறந்து பார்த்தபோது அதில் தலா கட்டு ஒன்றிற்கு 500 ரூபாய் நோட்டுக்கள் 100 எண்ணிக்கை வீதம் மொத்தம் 7 கட்டுகளும், 100 ரூபாய் நோட்டுக்கள் 60 எண்ணிக்கைகளும் ஆக மொத்தம் ரூ.3,56,000/- இருந்தது. மேற்படி தொகை குறித்து திரு.ஆறுமுகம் அவர்களிடம் கேட்டபோது, அவர் இன்று ஒப்பந்ததார்களிடம் செந்தாரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.V.பிரகந்தநாயகி அவர்கள் சொன்னதன்பேரில் பெற்று வைத்திருந்த கமிஷன் தொகை இதுதான் என்று தெரிவித்ததன் பேரில் ரூ.3,56,000/-த்தை சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் கைப்பற்றிக்கொண்டார். மேலும், திரு.ஆறுமுகம் அவர்களின் மஞ்சள் நிற கட்டைப்பையை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்ய அதில் செந்தாரப்பட்டி பேரூராட்சி அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் காணப்பட்டன. மேற்கடி திடீர் சோதனையானது 15.05.2025 ந் தேதி மாலை 18.30 மணி முதல் இரவு 22.45 மணி

வரை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விவரங்களிலிருந்து பொது ஊழியரான சேலம் மாவட்டம் செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.V. பிரகந்தநாயகி அவர்கள் அலுவலக உதவியாளர், திரு.K.ஆறுமுகம் மூலம் ஒப்பந்ததாரர்களிடம் கமிஷன் என்ற வகையில் கையூட்டு கேட்டுபெற்றுள்ளார் என தெரியவருகிறது. எனவே, மேற்கண்ட எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுதி பெறப்பட்டு அதன்பேரில் திருமதி.V. பிரகந்தநாயகி, செயல் அலுவலர், சிறப்புநிலை பேரூராட்சி, செந்தாரப்பட்டி, சேலம் மாவட்டம் மற்றும் திரு.K.ஆறுமுகம் அலுவலக உதவியாளர், சிறப்புநிலை பேரூராட்சி, செந்தாரப்பட்டி, சேலம் மாவட்டம் ஆகியோர் மீது சேலம், ஊ.த.க. பிரிவு குற்ற எண் 5/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி இன்று 16.09.2024 ஆம் தேதி காலை 8.00 மணிக்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், 15.05.2025 ந் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும், நடவடிக்கையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ 3,56,000/- ஆகியவற்றை கனம் ஊழல்தடுப்புச்சட்ட வழக்குகள் விசாரணைக்கான தனிநீதிமன்றம், சேலத்திற்கும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

N. C. [illegible] 16.05.2025

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.